பதிப்பிரிமை பெற்றது

# கல்விப் பொது தராதர உயர்தர உதவிக் கருத்தரங்குத் தொடர் - 2013

## மீட்டல் வினாப்பத்திரம் '

பொருளியல் - II 3 மணித்தியாலம்

தயாரிப்பு: கல்வியமைச்சின் வர்த்தக மற்றும் வியாபாரக் கல்விப் பிரிவு

கவனத்திற் கொள்க

ஒரு பகுதியிலிருந்து ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையாவது தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக

---

1) (i). கீழே தரப்படுபவை எவ் உற்பத்திக் காரணிக்குரியதாகும்?

(அ). காரியப் படிவு ஒன்று
(ஆ). நெற்பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தப்படும் மாடுகள்
(இ). தொழில்நுட்பவியலாளர் ஒருவரால் வாகனமொன்று பழுதுபார்க்கப்படல்
(ஈ). அரசின் மூலம் மிருகவள அபிவிருத்தித் திட்டமொன்று செயற்படுத்தப்படல்
(4 புள்ளி)

ii. வளத்திரட்சியைப் பூரணமாகவும் வினைத்திறனுடனும் பயன்படுத்துகின்ற ஒரு குறிப்பிட்ட பொருளாதாரத்தின் குத்தச்சில் கைத்தொழில் பண்டங்களும் கிடையச்சில் விவசாயப் பண்டங்களையும் கொண்ட ஒரு உற்பத்தி சாத்திய வளையியிற்குரிய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| கைத்தொழல் பண்டம் | விவசாய பண்ட அளவு |
|---|---|
| 0 | - |
| 10 | 5 |
| 20 | 10 |
| 30 | 15 |
| 40 | 20 |
| 50 | 50 |

(அ). மேலே தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் உற்பத்தி சாத்திய வளையியை வரைக (2 புள்ளி)

(ஆ). மேற்தரப்பட்ட பொருளாதாரத்தில் வளங்களின் தன்மை மற்றும் உற்பத்தி நுட்ப முறைகள் தொடர்பாக உங்களால் யாது கூற முடியும்? (2 புள்ளி)

(இ). கைத்தொழில் பண்டம் 30 மற்றும் விவசாயப் பண்டம் 85 கொண்ட உற்பத்திச் சேர்க்கை ஒன்று சமூகத்தினால் எதிர்பார்க்கப்படுகின்றது எனின் பொருளாதாரம் எதிர்நோக்குகின்ற பிரச்சினை எது என விளக்குக (2 புள்ளி)

(ஈ). "ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியுடன் உற்பத்தி சாத்திய வளையி வலப்புறம் நகர்கின்றது." அவ்வாறாயின் மேலும் அருமை தொடர்பான பிரச்சினை ஏற்பட முடியாது. ஏற்றுக் கொள்வீரா? விளக்குக. (2 புள்ளி)

iii. சந்தைப் பொருளாதாரமொன்றில் பொருளாதாரத் துறைகள் மீது விலை மூலம் எத்தகைய தொழிற்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றன? (3 புள்ளி)

iv. மாற்றுப் பொருளாதார அமைப்புக்கள் மூலம் உற்பத்தி தொடர்பான பிரச்சினைகள் தீர்க்கப்படும் விதத்தை விளக்குக. (3 புள்ளி)

v. அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கின்ற ஒரு முறையாக சந்தைப் பொருளாதாரம் உத்தமமாக அமையாதிருப்பது எந்நிலைமைகளின் கீழ் ஆகும். (2 புள்ளி)

2) i. நிரம்பல் விதியை விளக்கி நிரம்பல் வளையி மேல் நோக்கிச் சாய்வடைவதற்கான காரணங்களையும் தருக (4 புள்ளி)

ii. குறிப்பிட்ட பண்டமொன்றுகான சந்தைக் கேள்வி மற்றும் நிரம்பல் பற்றிய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| அலகொன்றின் விலை | கேள்வித் தொகை | மிகைநிரம்பல் தொகை |
|---|---|---|
| 10 | 1000 | -1000 |
| 40 | 400 | 200 |

(அ) மேற்தரப்பட்ட பண்டத்தின் சந்தைச் சமநிலை விலை மற்றும் சமநிலைத் தொகை யாது? (2 புள்ளி)

(ஆ) மேற்குறித்த பண்டத்தின் அலகொன்றுக்கு அரசினால் ரூபா 10 மானியமாக வழங்கப்படுகிறது எனின் பின்வருவனவற்றைக் காட்டுக

i. புதிய சமநிலை விலை, சமநிலைத் தொகை (2 புள்ளி)
ii. மானியத்துக்கு முன்னரான, பின்னரான நுகர்வோன் மிகை (2 புள்ளி)
iii. மானியத்துக்கு முன்னரான, பின்னரான உற்பத்தியாளன் மிகை (2 புள்ளி)
iv. மானியத்துக்காக அரசு தாங்கும் செலவு (1 புள்ளி)
v. மானியத்தினால் இழக்கப்படும் சமூகநலன் (1 புள்ளி)

iii. விலைக்கேள்வி நெகிழ்ச்சி ஒன்றைத் தீர்மானிக்கும் காரணிகள் எவை (3 புள்ளி)

iv. "காரணிகளை விற்பதால் கிடைக்கும் வருமானங்களில் (உழைப்புக்கள்) உள்ளடங்கியுள்ள பொருளாதார வாடகையின் அளவு, காரணி நிரம்பல் நெகிழ்ச்சியின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது." இக்கூற்றினை விளக்குக. (3 புள்ளி)

3) i. குறைந்து செல்லும் எல்லை விளைவு, குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு ஆகிய இரு எண்ணக்கருக்களுக்கடையேயுமுள்ள வேறுபாட்டைக் காட்டுக (4 புள்ளி)

ii. (அ) கணக்கியல் இலாபம் பொருளாதார இலாபத்திலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்பதை விளக்குக (2 புள்ளி)

(ஆ) சாதாரண இலாபம் உற்பத்திச் செயற்பாட்டின் செலவாகக் கருதப்பட முடியுமா? உமது விடையை விளக்குக (3 புள்ளி)

iii. உற்பத்திச் செயற்பாடொன்றில் சில நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக செய்யப்படும் செலவுகளை "ஆழ்ந்த செலவாகக" கருதப்படுவது ஏன்? விளக்குக. (3 புள்ளி)

iv. (அ) தனியுரிமைச் சந்தைக்கும் சிலருரிமைச் சந்தைக்குமிடையிலான வேறுபாட்டை விளக்குக (4 புள்ளி)

(ஆ) நிறைபோட்டிச் சந்தை நிறுவனமொன்றில் குறுங்கால நிரம்பல்கோடு மற்றும் உற்பத்தியை கைவிடும்புள்ளி என்பவற்றை வரைபடம் ஒன்றைப் பயன்படுத்தி விளக்குக (4 புள்ளி)

4) கீழே தரப்படுபவை குறித்த பொருளாதாரம் ஒன்று தொடர்பான கருகோள் ரீதியான சில தரவுகளாகும்.

ரூபா மில்லியன்

வெளிநாடுகளிலிருந்து கிடைத்த சொத்து வருமானம் ........................................50
தேறிய வட்டி ..........................................................................................200
உழைப்பு வருமானங்கள்................................................................................1000
குடும்பத்துறைக்கான அரசின் மாற்றல் செலவு......................................................300
பகிரப்பட்ட இலாபங்கள்..................................................................................60
தேறிய நேரில் வரி........................................................................................200

வாடகை வருமானம்...........................................................................................300
மொத்த உள்நாட்டு உற்பத்தி .................................................................1900
பகிரப்படாத இலாபங்கள்.......................................................................................40
ஏற்றுமதி.............................................................................................................400
இறக்குமதி.........................................................................................................200
வெளிநாட்டுத் தேறிய நடைமுறை மாற்றல்கள்.................................................70
கம்பனி இலாபங்கள் மீதான வரி.....................................................................50
மொத்த முதலீடு..................................................................................................300
தனியார் வரிகள்..................................................................................................100
உழைக்கப்பட்டதெனினும் குடும்பத்துறையைச் சென்றடையாத வருமானம்............. 250
வெளிநாடுகளுக்குச் செலுத்தப்பட்ட சொத்து வருமானம்................................. 100

i. பின்வருவனவற்றைக் கணிக்க
   (அ) தேசிய வருமானம்
   (ஆ) தேறிய உள்நாட்டு உற்பத்தி(சந்தை விலையில்)
   (இ) மொத்த தேசிய உற்பத்தி(சந்தை விலையில்)
   (ஈ) செலவிடத்தக்க குடும்பத்துறை வருமானம்
   (உ) தேசிய சேமிப்பு (02 புள்ளி வீதம் 10 புள்ளி)

ii. பின்வரும் நிகழ்வுகளைக் காரணம் காட்டி விளக்குக

(அ) ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியைவிட மொத்தத் தேசிய உற்பத்தி குறைந்த பெறுமதியைப் பெற்றது
(ஆ) மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கத்தைவிட மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் உயர்ந்த பெறுமதியைப் பெற்றது.
(இ) குறிப்பிட்ட ஒரு வருடத்தில் மெய்த் தேசிய உற்பத்தியைவிட மெய்த் தேசிய வருமானம் உயர்ந்த பெறுமதியைப் பெற்றது.
(ஈ) நடைமுறை விலைகளின் கீழான மொத்த தேசிய உற்பத்தியைவிட நிலையான விலைகளின் கீழான மொத்த தேசிய உற்பத்தி குறைந்த பெறுமதியைப் பெற்றது
(உ) மொத்த உள்நாட்டுச் செலவைவிட மொத்த உள்நாட்டு உற்பத்தி குறைந்த பெறுமதியைப் பெற்றது (5 புள்ளி)

iii. (அ) குறித்த ஒரு பொருளாதாரத்தில் கவனத்திற் கொள்ளப்படாத பொருளாதார நடவடிக்கைகள் எவை? (3 புள்ளி)
(ஆ) அத்தகைய பொருளாதார நடவடிக்கைகளினால் தேசிய கணக்குகளைக் கணக்கிடும்போது ஏற்படும் பாதிப்புகள் எவை? (2 புள்ளி)

5) குறிப்பிட்ட பொருளாதாரம் ஒன்று தொடர்பாக கீழே தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்டையாகக் கொண்டு கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. (தொகை மில்லியன் ரூபாயில்)

| | | |
|---|---|---|
| எல்லை நுகர்வு நாட்டம் (MPL) | | = 0.75 |
| முதலீடு | (I) | = 225 |
| தன்னியல்பான நுகர்வு | (a) | = 150 |

i) (அ) சமநிலை உற்பத்தியைக் கணிக்க (2 புள்ளி)
(ஆ) மொத்தச் செலவு மொத்த வெளிப்பாய்ச்சல் மற்றும் மொத்த உட்பாய்ச்சல் என்பவற்றை வரிப்படம் ஒன்றில் காட்டுக (2 புள்ளி)

ii) இப்பொருளாதாரத்தில் அரசாங்கம் தலையிட்டு 40 மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்கிறது. அதேபோல் வீட்டுத்துறைக்கான மானியமாக 40 மில்லியன் ரூபாவைச் செலவிடுவதுடன் 60 மில்லியன் ரூபா சுதந்திர வரியொன்றையும் அறவிடுகிறது.

(அ) புதிய சமநிலையைக் காட்டுக (2 புள்ளி)
(ஆ) இச்சந்தர்ப்பத்தில் பொருளாதாரத்தில் உட்பாய்ச்சலும் வெளிப்பாய்ச்சலும் சமனானது என்பதைக் காட்டுக (2 புள்ளி)

iii) இப்பொருளாதாரம் நிறைதொழில்மட்ட சமநிலையினை அடைவதற்கு உற்பத்தி 600 மில்லியன் ரூபாவினால் அதிகரிக்கப்பட வேண்டும். இதற்காக பொருளாதாரத்தில் முதலீடு எந்தளவால் அதிகரிக்கப்படல் வேண்டும். (4 புள்ளி)

iv (அ) நிறைதொழில்மட்ட சமநிலை உற்பத்தி மட்டத்தின் கீழ் மொத்தக் கேள்வி மேலும் அதிகரிக்குமாயின் பொருளாதாரத்தில் எத்தகைய நிலைமையொன்று உருவாகக்கூடும். வரிப்படம் ஒன்றின் மூலம் விளக்குக. (3 புள்ளி)

(ஆ) திறந்த பொருளாதாரமொன்றில் மொத்தக் கேள்வியுடன் தொடர்புடைய மாறிகள் எவை (3 புள்ளி)

v. வீட்டுத்துறை நுகர்வைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை? (3 புள்ளி)

6) i) அடிப்படைப் பணம் என்றால் என்ன? என்பதை விளக்கி அது பண நிரம்பலுடன் எவ்வாறு தொடர்புபடுகிறது என்பதைக் காட்டுக. (4 புள்ளி)

ii) வர்த்தக வங்கி நிறுவனமொன்றின் இருப்பு நிலைக் குறிப்பு கீழே காட்டப்படுகின்றது.

| சொத்து | | பொறுப்பு | |
|---|---|---|---|
| வைப்பு | 500 | பண ஒதுக்கு | 70 |
| | | திறைசேரி உண்டியல்கள் | 130 |
| | | கடன்களும் முற்பணங்களும் | 300 |
| | 500 | | 500 |

மத்திய வங்கி நிர்ணயித்துள்ள ஒதுக்கு வீதம் 20% ஆகும். இந்த வங்கி அமைப்பை நிலையாகப் பேணுவதற்காகத் தேவைப்படும் சீராக்கல்களைச் செய்த பின்னர் புதிய ஒன்றிணைக்கப்பட்ட இருப்புநிலைக் குறிப்பைத் தயாரிக்க. பன்முக வைப்புச் சுருக்கம் என்பதை விளக்குக. (4 புள்ளி)

iii) வங்கிகளுக்கிடையிலான அழைப்புக்கடன் சந்தை வட்டிவிகித உறுதியை ஏற்படுத்துவதற்காக மத்திய வங்கி எந்த வகையில் தலையிட முடியும்? (4 புள்ளி)

iv. (அ) இலங்கை மத்திய வங்கியின் நோக்கங்கள் எவை? (2 புள்ளி)

(ஆ) இலங்கை மத்திய வங்கியின் பிரதான தொழிற்பாடுகள் எவை? (3 புள்ளி)

v. மொத்தக் கேள்வி விரிவடையும் போது நாணயக் கொள்கை எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பதை விளக்குக. (3 புள்ளி)

7) i. (அ) சந்தைத் தோல்வி (Market failure) அரசாங்கத்தின் தோல்வி (Governtment Failure) ஆகிய இரு எண்ணக்கருக்களையும் இதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளுடன் விளக்குக. (2 புள்ளி)

(ஆ) பின்வரும் பண்டங்கள் எத்தகைய பண்டங்களாகும் என்பதைக் காரணங்களுடன் விளக்குக.

a. மணிக்கூட்டுக் கோபுரம்
b. ஓசோன் படை
c. கல்வி
d. நீச்சல் தடாகம்
e. சமுத்திரத்திலுள்ள மீன் வளம் (5 புள்ளி)

ii. பேரினப் பொருளாதார சமநிலையை நோக்கி பொருளாதாரத்தை நெறிப்படுத்தும்போது மீள் சுழற்சி அரச நிதிக் கொள்கையைப் பயன்படுத்துவது பல்வேறு விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இக்கூற்றை விளக்குக. (3 புள்ளி)

iii. (அ) வரிமுறையில் நியாயத்துவம் என்பதால் கருதப்படுவது யாது? (2 புள்ளி)
(ஆ) விருத்திமுறை வரி, குறைந்து செல்வரி, விகிதசம வரி என்பவற்றை உதாரணம் தந்து விளக்குக. (3 புள்ளி)
(இ) மிகை வரிச்சுமை என்பதால் கருதப்படுவது யாது? அதன் செயற்பாடு கேள்வி நெகிழ்ச்சி அடிப்படையில் தீர்மானிக்கப்படும் விதத்தை வரிப்படமொன்றின் மூலம் விளக்குக (3 புள்ளி)

iv. 2011 ஆம் ஆண்டில் இலங்கையில் வரவு செலவுத் திட்டப்பற்றாக்குறை நிதியீட்டம் செய்யப்பட்ட விதத்தைக் காட்டி அதன் விளைவுகளை விளக்குக. (2 புள்ளி)

8) i. ஒவ்வொரு நாட்டிலும் ஓரலகு உழைப்பினால் உற்பத்தி செய்யக்கூடிய உற்பத்தி அளவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| நாடு | வானொலி | குணினி |
|---|---|---|
| சீனா | 4 | 10 |
| தாய்வான் | 1 | 5 |

ஒவ்வொரு நாட்டிலும் 100 உழைப்பு அலகுகள் உள்ளன எனக் கொள்க

(அ) வானொலிப் பெட்டிகள் மற்றும் கணினி இயந்திரம் என்பவற்றை உற்பத்தி செய்யும்போது ஒப்பீட்டு நன்மை எந்நாட்டுக்கு காணப்படுகிறது. (2 புள்ளி)

(ஆ) இரு நாடுகளினதும் உற்பத்தி சாத்திய வளையியினைக் காட்டி ஒப்பீட்டு நலனை அடிப்படையாகக் கொண்டு பூரண சிறப்புத் தேர்ச்சியுடன் உற்பத்தி செய்யப்படுமாயின் ஒவ்வொரு நாட்டினதும் உற்பத்திச் சேர்க்கையினை சாத்திய வளையிகளில் காட்டுக (2 புள்ளி)

(இ) ஒப்பீட்டு நலன் அடிப்படையிலான சிறப்புத் தேர்ச்சியின் பின்னர் 100 வானொலிப்பெட்டிகளுக்கு 400 கணணிகளை பரிமாற்றிக் கொள்ளும்போது ஒவ்வொரு நாட்டினதும் நுகர்வுச் சாத்திய வளையியினை வரையப்பட்ட உற்பத்தி சாத்திய வளையி வரைபடத்தில் காட்டுக (2 புள்ளி)

(ஈ) இரண்டு நாடுகளுக்கும் பரஸ்பர நன்மை கிட்டுகின்ற வெளிவாரி பரிமாற்று விகித இடைவெளியைக் காட்டுக (2 புள்ளி)

ii. கீழே தரப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்கள் சென்மதி நிலுவைப் பட்டியலில் எந்தக் கணக்குகளில் உட்படுத்தப்படும்.

(அ) வெளிநாடுகளுக்குச் செலுத்தப்பட்ட கடன் வட்டி
(ஆ) அரசாங்கம் பெற்றுக்கொண்ட நீண்டகால வெளிநாட்டுக்கடன்களுக்கான தவணைக் கொடுப்பனவு
(இ) வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கையர் இந்நாட்டிற்கு அனுப்பும் பண அனுப்பல்கள்
(ஈ) இலங்கை வர்த்தகர்கள் வெளிநாடு செல்வதற்காக விமான டிக்கட்டுகளைக் கொள்வனவு செய்தல் (4 புள்ளி)

iii. பெயரளவுப் பாதுகாப்பு விகிதம் மற்றும் பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு விகிதம் என்பவற்றுக்கு இடையிலான வேறுபாடு யாது? (4 புள்ளி)

iv. நிலையான வெளிநாட்டு நாணயமாற்று விகித முறையினதும், நெகிழும் வெளிநாட்டு நாணய மாற்று விகித முறையினதும் நன்மை தீமைகள் இவ்விரண்டு தருக. (4 புள்ளி)

v. இலங்கையுடன் தொடர்புள்ள வலயரீதியிலான பொருளாதார ஒத்துழைப்புக்கள் நான்கு தருக (2 புள்ளி)

9) i. பொருளாதார வளர்ச்சியை வரைவிலக்கணப்படுத்தி பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்குப் பொருத்தமான இரண்டு வழிமுறைகளைப் பெயரிடுக. (4 புள்ளி)

ii. "அனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி" மற்றும் "வறியவர்களுக்குச் சார்பான பொருளாதார வளர்ச்சி" ஆகிய எண்ணக்கருக்களை வரைவிலக்கணப்படுத்துக (4 புள்ளி)

iii. மானுட அபிவிருத்தி மற்றும் நிலைபேறுடைய அபிவிருத்தி என்பவற்றைக் குறிப்பிட்டு அவற்றின் பரிமாணங்கைளக் காட்டுக. (4 புள்ளி)

iv. (அ) இலங்கையின் தங்கியிருப்போர் விகிதத்தின் போக்கினைக் காட்டுக. (2 புள்ளி)

(ஆ) சனத்தொகை முதிர்வடைதலின் சமூக பொருளாதார விளைவுகள் யாவை? அதனைக் குறைப்பதற்கான கொள்கை ரீதியிலான நடவடிக்கையாக நீர் குறிப்பிடுபவை யாது? (4 புள்ளி)

v. பல்பரிமான வறுமை, வறுமைச் சுட்டென் எவ்வாறு கணிக்கப்படுகிறது? (2 புள்ளி)

10) i. (அ) 2006 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட பத்தாண்டுத்திட்டம் அபிவிருத்திச் சட்டத்தின் இலக்காகக் கொள்ளப்பட்ட பொருளாதார வளர்ச்சி மற்றும் முதலீட்டு எதிர்பார்ப்புக்கள் எவை? (2 புள்ளி)

(ஆ) கடந்த ஐந்தாண்டு காலத்தினுள் பத்தாண்டு அபிவிருத்திச் சட்ட இலக்கினை அடைந்து கொள்வது இலங்கைப் பொருளாதாரத்திற்கு சாத்தியமாகியுள்ளதா? என்பதை விளக்குக. (2 புள்ளி)

(இ) பொருளாதார வளர்ச்சி மற்றும் முதலீட்டு இலக்குகளை நிறைவேற்றிக் கொள்ளும்போது இலங்கைப் பொருளாதாரம் எதிர்நோக்கும் சவால்கள் எத்தகையன? (3 புள்ளி)

ii. "மூலதனப் பற்றாக்குறை அல்லது முதலீட்டு இடைவெளி பொருளாதார வளர்ச்சி இலக்குகளை அடைந்து கொள்கையில் இலங்கை எதிர்கொள்ளும் பிரதான சவாலாக உள்ளது."

(அ) மூலதனப் பற்றாக்குறை எனப்படுவது யாது? அதனை நிதியீட்டம் செய்துகொள்ளக்கூடிய மூலாதாரங்கள் எவை? (2 புள்ளி)

(ஆ) இலங்கையை நோக்கி வருகின்ற வெளிநாட்டு முதலீடுகளின் நிகழ்காலப் போக்கு எத்தகையது? (2 புள்ளி)

(இ) இலங்கையின் முதலீட்டுத் துறையில் காணப்படுகின்ற பிரதான தடைகள் எவை? (3 புள்ளி)

iii. கடந்த இரண்டு தசாப்தங்களில் இலங்கையின் மொத்த வறுமை குறைவடைந்த போதிலும் அதன் துறை ரீதியிலான வேறுபாடுகள் தொடர்ந்தும் காணப்படுகிறது.

(அ) மேற்குறித்த கூற்றினை உறுதிப்படுத்துக (2 புள்ளி)

(ஆ) இலங்கையில் வறுமையைக் குறைப்பதற்குச் செயற்படுத்தப்பட்ட தேசிய மற்றும் உள்நாட்டு மட்டத்திலான வேலைத்திட்டங்கள் எவை? (2 புள்ளி)

(இ) வறுமைக் குறைப்பு வேலைத்திட்டமொன்று என்ற வகையில் சமூர்த்தி திட்டத்தின் குறைபாடுகள் எவை? (2 புள்ளி)